**18 வருணன்விட்டகடலைவற்றச்செய்தபடலம்**

அபிஷேக பாண்டியன் சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தில், சோமசுந்தர்ருக்கு வாசனை மிகுந்த பச்சைக் கற்பூர நீரால் நீராட்டி, கற்பூர சுந்தரர் என்று சொல்லிமகிழ்ந்தான்.

ஒரு சமயம் வாட்டமடைந்துள்ள இந்திரனிடம் வருணன் அதற்கான காரணம் கேட்டான்.

அதற்கு இந்திரன், சோமசுந்தரை பூஜிக்க, அபிஷேக பாண்டியன் பூஜித்து முடிக்கும் வரைதான் காத்திருக்க வேண்டியிருப்பது தமக்கு வருத்தை அளிப்பதாக கூறினான். இந்திரனிடம் இந்த லிங்கத்தை விடுத்து வேறு லிங்கத்தை வழிபட யோசனைக் கூறினான் வருணன். இந்திரன் தன்னுடைய பிரம்மஹத்தி தோஷத்தையும், வெள்ளை யானையின் சாபத்தையும் நீக்கியதால் தான் இச்சிவலிங்கத்தையே வணங்குவதாகக் காரணத்தை கூறினான்.

அப்படியானால் எவராலும் நீக்க முடியாத தன்னுடைய வயிற்று வலியை தீர்க்க ஈசனால் முடியுமா என்ற கேள்வியை எழுப்பினான் வருணன். இந்திரன் அதற்கு பிறவி நோயையே தீர்க்க வல்லவரான ஈசனால் முடியாதது உண்டோ? என்றான்.

ஐயனை சோதித்துப் பார்க்க எண்ணம் கொண்ட வருணன், கடலை அழைத்து மதுரையை அழிக்குமாறு ஏவினான். ஊழிகாலம் போல் கடலானது பொங்கி மதுரையை சூழ்ந்தது. பயம் கொண்ட மக்கள் மன்னனிடம் தஞ்சம் அடைந்தனர். மன்னனும் சுந்தரேசனை வேண்ட, தன் சடா முடியில் இருக்கும் நான்கு மேகங்களையும், மதுரையை அழிக்க வரும் கடலை வற்றும்வரை பருகும்படி கட்டளையிட்டார். அம்மேகங்களும் நீரைக் குடிக்க ஐயனின் திருவிளையாடலை எண்ணி யாவரும் மகிழ்ந்தனர்.

**பல்லவி**

பாண்டியனுக்குப் பின் உன்னைத் தான் பூஜிப்பதால்
நேரமாவதைச் வருணனிடம் சொல்லி வருந்தினான் - இந்திரன்

**அனுபல்லவி**

வேண்டியப் பூஜை புரிய வேறு லிங்கமில்லையோ என்ற
வருணனிடம் உன் மகிமையை சோதித்தறியச் சொன்னாய்

**சரணம்**

கண்டோர் அஞ்ச கடல் பொங்கச் செய்தான் - வருணன்
கலங்கின பாண்டியன் உன் காலைப் பிடித்திறைஞ்ச
தன் சடையினின்று மேகம் நான்கினையும் அனுப்பி கடல்
தண்ணீர் அனைத்தையும் பருகிடச் செய்தாய்